தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-5-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மக்காச் சோளத்தை சேமித்து விற்கவும்

மார்ச் 2013 இல் வெளியிடப்பட்ட அமெரிக்க வேளாண்துறை அறிக்கையின் படி 2013 இல் அமெரிக்காவில் 77 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மக்காச்சோளம் 97.75 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டுள்ளது.

சிகாகோ வணிக மையத்தில் மே 2013க்கான மக்காச்சோள முன் பேர விலை புஷல் (25.40 கிலோ) ஒன்றிற்கு 7.26 டாலராகவும் மற்றும் செப்டம்பர் 2013க்கான விலை 5.97 டாலராகவும் உள்ளது. அமெரிக்கா மற்றும் பிரேசிலில் விதைப்பு அதிகரித்துள்ளதால் செப்டம்பர் மாத முன்பேர வர்த்த ஒப்பந்தத்தில் விலை குறைந்துள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் இந்தியாவில் 22.5 மில்லியன் டன் மக்காச்சோளம் 8.67 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டது. கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, இராஜஸ்தான், மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் 60 சதவீத மக்காச்சோள பரப்பளவு மற்றும் 70 சதவீத மக்காச்சோள உற்பத்தியில் பங்களிக்கின்றன.

2012-2013 ஆம் ஆண்டில் ரபி பருவ மக்காச்சோள உற்பத்தி 5.5 மில்லியன் டன்கள் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. வர்த்தக மூலங்களின் படி பீகார் மாநிலத்தில் மட்டும் கடந்த ஆண்டை விட இந்த ரபி பருவ உற்பத்தி 20 சதவீதம் அதிகரித்தும் மற்ற அனைத்து மாநிலங்களிலும் உற்பத்தி குறைந்தும் காணப்படுகிறது. 2011-2012 இல் கர்நாடக மாநிலம் 4.4 மில்லியன் டன் மக்காச்சோளத்தை 1.3 மில்லியன் எக்டரில் உற்பத்தி செய்தது. இந்திய உற்பத்தியில் தமிழ்நாடு ஐந்து சதவீதம் பங்களிக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக மக்காச்சோளப் பரப்பளவு மற்றும் உற்பத்தி தமிழகத்தில் உயர்ந்து வருகிறது. இதற்குப் பெருகி வரும் கோழித் தீவனத்திற்கான மக்காச்சோளத் தேவையே காரணமாகும். தமிழகத்தின் உற்பத்தித்திறன் எக்டருக்கு 63 குவிண்டால் ஆகும்.

இந்தியாவில் 2009-2010இல் 1.9 மில்லியன் டன்களாக இருந்த மக்காச்சோள ஏற்றுமதி 2011-12 இல் இரு மடங்கைக் காட்டிலும் அதிகரித்து 4.8 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ள மக்காச்சோள ஏற்றுமதி 3 முதல் 3.5 மில்லியன் டன்களாகும். குறைந்த உற்பத்தி மற்றும் உயர்ந்து வரும் உள்நாட்டுத் தேவை ஆகிய காரணங்களினால் இப் பருவத்தில் மக்காச்சோள ஏற்றுமதி 3 முதல் 3.5 மில்லியன் டன்களாகக் குறையும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி ஜுன் மற்றும் ஜுலை 2013 வரை மட்டுமே இருக்குமென்றும் அதன்பின் உயர்ந்து வரும் உலகத் தேவையை இதர நாடுகளின் உற்பத்தி ஈடு செய்யும் என்று வர்த்தக மூலங்கள் தெரிவிக்கின்றன.

வருடம் முழுவதும் மக்காச்சோளம் பயிரிடப்பட்டாலும் நீர்ப்பாசன வசதியுள்ள விவசாயிகள் மட்டுமே தைப்பட்டத்தில் மக்காச்சோளம் பயிர் செய்வர். தற்போது தைப்பட்டப் பயிர் சந்தைக்கு வந்து கொண்டிருக்கிறது. விவசாயிகள் சரியான விற்பனை முடிவுகளை எடுக்கும் தருணத்தில் உள்ளனர். தற்போது மக்காச்சோளத்தின் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1350 முதல் 1400 வரை என்ற நிலையில் உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது கடந்த 17 ஆண்டுகளாக உடுமலைப் பேட்டை சந்தையில் நிலவிய விலை நிலவரத்தை ஆய்வு செய்தது. மேலும் வர்த்தகர்களிடமும் ஆய்வு நடத்தியது. மே, 2013 வரை மக்காச்சோள விலை குவிண்டாலுக்கு ரூ.1450 வரை இருக்குமென்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மே, 2013க்குப் பின் மக்காச்சோள விலை குவிண்டாலுக்கு ரூ.1450க்கு மேல் உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. வர்த்தக மூலங்களின் படி இந்த ஆண்டு தைப்பட்ட வரத்து கடந்த ஆண்டை விடக் குறைந்துள்ளது. தற்போது கோழிப்பண்ணை நிறுவனங்கள் கர்நாடகா மற்றும் பீகாரில் மக்காச்சோளத்தைக் கொள்முதல் செய்கின்றன. அடுத்த மாதம் வரை இதே போக்கு நீடிக்கும் மற்றும் அதன் பின் பற்றாக்குறை ஏற்படும் அதன் பிறகு மக்காச்சோள விலை ரூ.1500 ஐத் தாண்டும்.

மே முதல் ஜுலை வரை எதிர்பார்க்கப்படும் மக்காச்சோள பற்றாக்குறையினால் வரும் மாதம் முதல் இதன் விலை அதிகரிக்கும். கோழிப்பண்ணைகளின் தேவை, ஏற்றுமதித் தேவை மற்றும் எதிர்பார்க்கப்படும் குறைந்த வரத்து ஆகிய காரணங்களினால் இதன் விலை உயர வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. ஆகவே விவசாயிகள் மக்காச்சோளத்தை சேமித்து வைத்து ஜுன் மற்றும் ஜுலை 2013இல் விற்பனை செய்து நிறைந்த இலாபமடைய பரிந்துரைக்கப் படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள :-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண்: 0422-2450507

மக்கள் தொடர்பு அலுவலர்